**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.53
https://ngmtamil.in/

# நாட்டுப்புறப் பாடல்களில் சடங்குகளும் நம்பிக்கைகளும்

**ந.பொன்ராஜ்,**

பதிவு எண்: PUAJ240361032, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி மாவட்டம்.

பெரியார் பல்கலைக்கழகம் இணைவுப் பெற்றது.

**நெறியாளர்: முனைவர் டி.க.சித்திரைசெல்வி,**

இணைப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி மாவட்டம்.

பெரியார் பல்கலைக்கழகம் இணைவுப் பெற்றது.

**ஆய்வுச்சுருக்கம் (Abstact)**

மனித வாழ்வில் பிறப்பு முதல் இறப்பு வரை பல்வேறு நம்பிக்கைகள் சடங்குமுறைகள் காணப்படுகின்றன. இவற்றைப் பின்பற்றுவதால் தங்கள் வாழ்வு வளமும், நலமும் பெறும் என்று மக்கள் நம்பினர். இவைகள் மனிதனால் உருவாக்கப்பட்டு அம்மனித சமூகத்தால் பின்பற்றப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவற்றை நாட்டுப்புறவியல் துறை ஆராய்ந்து கருத்துருக்களையும் தந்திருக்கின்றன. மனிதப் பிறப்பு, தொட்டிலிடுதல், காதுகுத்துதல், திருமணச் சடங்கு, இறப்புச் சடங்கு, இயற்கைப் பற்றிய சடங்கு என்ற சடங்குமுறைகளைப் பின்பற்றுவதும், சடங்குகளோடு தொடர்பான நம்பிக்கைகளான குழந்தை தொடர்பான நம்பிக்கைகள், கண்ணேறு கழித்தல், நாள் பார்த்தல், சகுணம் பார்த்தல் முதலியவற்றை செய்தல் நாட்டுப்புற மக்களிடையே காணலாகும் நம்பிக்கைகளாகும். இன்றைய நவீன நாகரிகம் நாட்டுப்புற மக்களின் வாழ்க்கை முறையை பல வகையில் மாற்றியமைத்தாலும் மரபு ரீதியான சடங்கு முறைகளையும் நம்பிக்கைகளையும் இன்றளவும் மக்கள் பின்பற்றி வருவதை ஆராயும் நோக்கில் இவ்வாய்வு நிகழ்த்தப்பட்டுள்ளது.

**திரவுச்சொற்கள்:** சடங்குகள், நம்பிக்கைகள், பண்பாடு, நாட்டுப்புறவியல், இயற்கை, பண்பாடு, நாட்டார், திருமணம், வேளாண்மை, தொழில், கண்ணேறு கழித்தல், பிறப்பு, இறப்பு, மழை போன்றவை.

**முன்னுரை**

நாட்டுப்புற மக்களே ஒரு நாட்டின் உண்மையான நாகரிகம், பண்பாடு, கலை, இலக்கியம் ஆகியவற்றைக் காட்டும் வாழ்க்கையினை உடையவராவர். மனித இனம் தோன்றிய அன்றே நாட்டுப்புற இலக்கியங்களும், நாட்டுப்புற கலைகளும் தோன்றிவிட்டன எனக் கருதலாம். கிராமமாக

இருந்தாலும் நகரமாகயிருந்தாலும் ஆங்காங்கு வாழும் ஒரு குழு அல்லது பிரிவினரால் வெளிப்படுத்தப்பெறும் தொன்றுதொட்ட வாய்மொழி வழக்குடைய கலை இலக்கிய வாழ்க்கைக் கூறுகளை ஆராயும் இயல் நாட்டுப்புறவியல் என்று நாட்டார் வழக்காற்றியல் என்றும் வழங்கப்பெறுகின்றன. இக்கூறுகளில் சடங்குகளும் நம்பிக்கைகளும் முக்கியமானதொன்றாகும். மக்களுக்காக மக்கள் ஏற்படுத்தப்பட்ட ஒரு வரன்முறை சடங்கு என்பதாகும். மனிதனும் மனித சமூகமும் வாழ்க்கையை நெறிப்படுத்த ஏற்படுத்திக்கொண்ட ஒழுக்கம் என்றுகூட இதனைக் கூறலாம். குடும்பம் தழைக்க, நோயின்றி வாழ, பழி பாவங்களைப் போக்க, துன்ப துயரங்கள் விலக, உறவுகள் நீடிக்க, எதிரிகளைத் தண்டிக்க, இயற்கையை வசப்படுத்த, விஞ்சிய ஆற்றலைப் பெற என்று பல்வேறு நோக்கங்களுக்காக சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன. சடங்கினின்று தொன்றுதொட்டு வந்தவை நம்பிக்கைகள் ஆகும். மனித வாழ்வில் பிறப்பு முதல் இறப்பு வரை பல்வேறு நம்பிக்கைகள் காணப்படுகின்றன. இந்நம்பிக்கைகளைப் பின்பற்றுவதால் தங்கள் வாழ்வு வளமும், நலமும் பெறும் என்று மக்கள் நம்புகின்றனர். இந்நம்பிக்கைகள் மனிதனால் உருவாக்கப்பட்டு, அம்மனித சமூகத்தால் பின்பற்றப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு சடங்குகளும் நம்பிக்கைகளும் நாட்டுப்புற மக்களின் வாழ்வியலில் ஊறிப்போய் இருந்ததை கலை நயத்தோடு கூடிய பாடல்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளமையை இக்கட்டுரை ஆராய்கிறது.

**நாட்டுப்புறவியல் - ஓர் அறிமுகம்**

நாட்டுப்புற மக்களின் பழக்கவழக்கங்களையும் பண்பாடுகளையும் நம்பிக்கைகளையும் இலக்கியங்களையும் ஆராயும் இயலே நாட்டுப்புறவியலாகும். ஒரு நாட்டின் வாழ்வையும், வரலாற்றையும், குறையையும், நிறையையும் தெளிவாகக் காட்டுவன நாட்டுப்புற இலக்கியங்கள். மக்களின் பண்பாடு, பழக்கவழக்கங்கள், பழமையான எண்ணங்கள் ஆகியவற்றை வெளிப்படையாகக் காட்டும் கண்ணாடியாகும். நாட்டுப்புற மக்களது உணர்வுகளையும் கவிதை புனையும் ஆற்றலையும் கற்பனை வளத்தையும் நாட்டுப்புறப் பாடல்களிலே காணலாம்.

19-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளில் பெசன்ட் (Peasant) என்ற சொல் விவசாய மக்களைக் குறித்து, பின்னர் படிப்பறிவில்லாத நாட்டு மக்களைக் குறித்து வந்தது. “நாகரிகம் வாய்ந்த மக்களின் மரபுவழி வந்த படைப்புகளும், நாகரிகமற்ற பழங்குடி மக்களின் மரபு வழிப் படைப்புகளும் நாட்டார் வழக்காற்றியலாகும். இவை ஒலிகளையும் சொற்களையும் ஒருவித ஓசையமைப்புக்கு உட்படுத்தி அமைக்கப்பட்டதாகும். நாட்டார் வழக்காற்றியல் நாட்டார் பற்றிய ஓர் அறிவியல் அல்ல. ஆனால் மரபு சார்ந்த நாட்டார் தம் அறிவியல். மரபு சார்ந்த நாட்டார் தம் பாடல் பற்றிய அறிவியல்” என்கிறார் ஜோனாஸ் பாலிஸ் (ஓ.முத்தையா, பண்பாட்டு பதிப்புகள், ப.212). நாட்டார் பாடல்களில் வாய்மொழிப் பாடல்களைப் பல்வேறுபட்ட சூழல்களில் வைத்து பாடி வருகின்றனர். குழந்தை பிறந்தபோதும், அழும்போதும், தூங்கச் செல்லும் போதும், விளையாடும்போதும், பருவமடையும் சடங்குகளிலும், திருமணத்தின் போதும், இறப்பிலும் பாடல்கள் பாடப்படுகின்றன. இவற்றைப் பற்றி ஆராய்வது நாட்டுப்புறவியலாகும்.

**சடங்குகள்**

மனிதன் தோன்றிய அன்றே சடங்கும் தோற்றம் பெற்றுவிட்டது. சடங்கானது மனித மனத்தின் வெளிப்பாடாகும். தொடக்கக் கால இனக்குழுச் சமூகத்தில் சடங்குகளே வாழக்கையாகவும்,

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

வாழ்க்கையே சடங்குகளாகவும் இருந்தன. சடங்குகள் முழுக்க முழுக்க மக்களின் நம்பிக்கை சார்ந்தவை. கூட்டாக மேற்கொள்ளப்பட்டவை. நம்பிக்கை மனிதரின் உணர்வு நிலையில் இருக்க, சடங்கு செயல் வடிவில் நிகழ்த்தப்படுகிறது. ஒன்றைச் செய்து மற்றொன்றைப் பெறுவது சடங்கின் நோக்கமாக இருப்பதால், நிகழ்த்துதல் என்பது இதன் அடிப்படைக் கூறாக அமைகிறது. மக்கள் ஏதோ ஒரு நம்பிக்கையின் அடிப்படையில் வழிவழியாக மரபு ரீதியாக வாழ்வின் அனைத்துக் கட்டங்களிலும் செய்யப்படும் தொடர் செயல்களே சடங்குகள் என்று கொள்ளலாம்.

"மனித சமூகம் தோன்றியதிலிருந்து தங்களுக்கென ஒரு கட்டுப்பாட்டை விதித்துக்கொண்டு அதற்கு ஏற்ப பழக்கவழக்கங்களையும் நம்பிக்கைகளையும் உருவாக்கிக்கொண்டு பல நிலைகளில் சடங்குகளைச் செய்து வந்தன" (முனைவர் தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப.134)

சடங்குகளை வாழ்க்கை வட்டச் சடங்குகள், வளமைச் சடங்குகள், வழிபாட்டுச் சடங்குகள், மந்திரச் சடங்குள் என்று வகைப்படுத்தப்படுகின்றன. இச்சடங்குகள் பிறப்பு முதல் இறப்பு வரை எல்லாக் கால கட்டங்களிலும் நடைபெறுகின்றன. பிறப்புச் சடங்கு, சேனை தொடுதல், தொட்டிலிடுதல், காது குத்துதல், பூப்புச் சடங்கு, திருமணச் சடங்கு, வளைகாப்புச் சடங்கு, இறப்புச் சடங்கு என்று பொதுவாகக் கூறப்படுகிறது.

**பிறப்புச் சடங்குகள்**

மக்களின் வாழ்வில் மாபெரும் செல்வமாகப் போற்றப்படுவது மக்கள் செல்வமாகும்.

"பெருவற்றுள் யாமறிவது இல்லை அறிவித்த
முக்கட்பேறு அல்ல பிற" (குறள்.61)

என்று வள்ளுவர் மக்கள் செல்வத்தின் பெருமையைக் குறிப்பிடுகிறார். குழந்தை பிறப்பின்போது தாயும் சேயும் தனியிடத்தில் இருப்பார்கள். 15 நாள் கழித்துத் தீட்டுக்கழித்தல் என்னும் சடங்கு நிகழும். தாயையையும் சேயையும் நன்னீரில் குளிப்பாட்டிப் புதிய உடையை அணிவிப்பார்கள.; வீடெங்கும் சாணம்கொண்டு மெழுகிக் கோலம் போட்டு அலங்கரிப்பார்கள். கைராசியுள்ள ஒருவரை அழைத்து குழந்தையின் நாவில் விளக்கெண்ணெயைத் தடவச் செய்வார்கள். வருங்காலத்தில் குழந்தை பெரியவனாக வளர்ந்து குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் புகழ் சேர்க்க வேண்டும் என்ற நோக்கில் இச்சடங்கு செய்யப்படுகிறது.

**தொட்டிலிடுதல்**

குழந்தையைத் தொட்டிலிட்டுத் தாலாட்டுப்பாடி தூங்கவைக்கும் பழக்கம் தமிழரின் பண்பாகும். குழந்தையை முதன்முதலில் தொட்டிலில் இடுவது நாட்டுப்புற மக்களால் ஒரு சடங்காகவே மேற்கொள்ளப்படுகிறது. தொட்டிலுக்கு வேண்டிய மரங்களைக் குழந்தையின் மாமன்மார்கள் கொண்டு வரவேண்டும் என்பது மரபாகும். குழந்தைக்குத் தாராளமாகத் தாய்ப்பால் கிடைக்க வேண்டும்மென்பதால் இலுப்பைக் கொண்டு வந்து தொட்டில் அமைப்பார்கள்.

**காது குத்துதல்**

குழந்தைகள் தொடர்பான சடங்குகளில் சிறப்பிடம் பெறுவது காது குத்துதல் சடங்காகும். அவரவர் தம் குலதெய்வக் கோயில்களில் குழந்தைகளுக்கு முடி எடுத்து காதுகுத்தும் சடங்கு அனைத்து குழந்தைகளுக்கும் தவறாது நடத்தப்படுகிறது. குழந்தைக்குக் கருவில் உண்டான பாரம்பரிய குறைகளை நீக்குவதற்காக இச்சடங்கு செய்யப்படுவதாக் கூறப்படுகிறது.

**திருமணச் சடங்கு**

ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்வதற்காக சமுதாயத்தில் ஒழுங்குப்படுத்தப்பட்ட ஒரு செயல்தான் திருமணம். பொதுவாக, கடிமணம், மன்றல், வதுவை, வரைவு, மங்களம் எனப் பல்வேறு சொற்களால் கூறுகின்றனர். தமிழர் வாழ்வில் திருமணம் என்னும் நிகழ்வானது ஒரு தனிமனிதனுக்கு சமூகத் தகுதியையும் அளிக்கும் அங்கீகாரமாக விளங்குகிறது. திருமணச் சடங்கில் பரிசம் போடுதல், முகூர்த்தக்கால் நடுதல், தாலி கட்டுதல் ஆகியவை குறிப்பிடத்தக்கவை எனலாம். அரசாணைக்கால் நட்டவுடன் பந்தல் போடும் நிகழ்ச்சி நடைபெறும்.

**இறப்புச் சடங்கு**

இறப்புச் சடங்குகளில் கொள்ளி வைத்தல் என்பது மிக முக்கியமான சடங்காகும். சுடுகாட்டில் உடலுக்கு எரியூட்டி முன் இறந்தவர்களின் மகன் நிறைந்த கலயத்தை தோளில் வைத்து மூன்று முறை உடலை வலம் வந்து குடம் உடைத்து கொள்ளி வைக்கும் நிகழ்வ கொல்லி வைத்தல் என்பதாகும்.

தாய் இறந்தால் தலைமகனும் தந்தை இறந்தால் இளைய மகனும் கொள்ளி வைக்க வேண்டும் என்ற வழக்கம் இன்றும் இருந்து வருகிறது. நோய் வாய்ப்பட்டோ இயல்பாகவோ இறப்போருக்கு மட்டுமே இறப்புச் சடங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. அகால மரணம் அடைந்தோருக்கு எவ்வித சடங்கும் நிகழ்த்தப்படுவதில்லை என்பது குறிப்படத்தக்கதாகும்.

**மழைச் சடங்கு**

மழைச் சடங்கு நாட்டுப்புற மக்களால் நிகழ்த்தப்படும் வளமை சடங்குகளும் குறிப்படத்தக்க ஒன்றாகும்.

“நீரின்றி அமையாது உலகு” (குறள்.33) என்பர் வள்ளுவர்.

“மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்”(சிலப்பதிகாரம்.பா.வரி.3)

என்று மழையை வாழ்த்தி பாடுவார் இளங்கோவடிகள்

நாட்டுப்புற மக்களின் அடிப்படைத் தொழில் வேளாண்மை ஆகும். பயிர்கள் வளர மழை அவசியம். மழை பெய்தால்தான் பலன்பெற முடியும். இல்லையேல் வறுமைதான். மழையின்றி பஞ்சம் ஏற்படும் காலங்களில் மழை பொழிய வேண்டி நாட்டுப்புற மக்களால் பல்வேறு சடங்குகள் இன்றளவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திருமணமான பெண்கள் கன்னிப் பெண்களும் வீடு வீடாகச் சென்று மழைக்கஞ்சி மழைக்கஞ்சி என்று கூவி அரிசி மாவு, தானியங்களை பிச்சையாக பெற்று வந்து ஊரின் பொதுவிடத்தில் வைத்து உப்பில்லா மழைக்கஞ்சி காய்ச்சிடுவர். காய்ச்சிய மழைக்கஞ்சியை ஊர் மக்கள் அனைவருக்கும் வழங்குவர். பிறகு வயது முதிர்பெண்கள் கஞ்சி காய்ச்சிய சட்டிகளை கீழே போட்டு உடைத்து மாரடைத்து ஒப்பாரி பாடுவர்.

சடங்குகள் கூட்டாக நிகழ்த்தப்படும் தன்மையை பெற்றிருப்பதால் சமூக வாழ்வில் ஒற்றமை ஏற்படுகிறது. மக்கள் சமூகம் ஒன்றிணைகிறது. நாட்டுப்புற மக்களின் வாழ்வோடு ஊறிப்போய் உள்ள சடங்குகள் அவர்களைப் பாதுகாக்கின்றன, வழி நடத்துகின்றன என்பதை அறியமுடிகிறது.

**நம்பிக்கை**

தொல்காப்பியத்தில்,

“நம்பும் மேவும் நசையாகுமே” (தொல்.பொருள். நூற்.915)

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

என தொல்காப்பியர் நம்பு என்ற சொல்லினை 'நசை' என்ற பொருளில் கையாண்டுள்ளார். நம்பு என்பதனை 'விருப்பம்' என்ற பொருளிலும் கையாண்டுள்ளார். நம்பு என்பதற்கு 'விருப்பம், ஆவல், ஆசை' (கலைச்சொல் தமிழகராதி. தொகுதி.3) என்று அகராதி பொருள் தருகின்றன.

நற்றிணையில் நம்பு என்ற வினைச்சொல் நம்பிக்கை என்ற பொருளில் சுட்டப்படுகிறது.

"சேரியர் பெண்டிர் நற்சொல் நம்பிச்
சுடுவான் போல நோக்கும்" (நற்.பா.36)

எனவும், மற்றொரு பாடலில் நம்புதல் என்ற சொல்லாட்சியும் இடம்பெற்றுள்ளது.

"நாடல் சான்றார் நம்புதல் பழியெனிற்..." (நற்.பா.121)

மேற்கண்ட சான்றுகளிலிருந்து நம்பு என்ற சொல் தொடக்கத்தில் விருப்பம் என்ற பொருளிலும், பின்னர் நம்பிக்கை என்ற பொருளிலும் கையாளப்பட்டு வருவதை அறியலாம். காலப்போக்கில் இச்சொல் நம்பிக்கையை மட்டும் குறிப்பதற்குப் பயன்பட்டு வந்துள்ளதனை இன்றைய நடைமுறை வழக்கில் நாம் உணரலாம்.

இயற்கையின் புதிரான செயல்களை உணர இயலாத நிலையிலும், திடீர் நிகழ்வுகளுக்குக் காரணம் அறியாத நிலையிலும், மனிதமனம் தன்போக்கில் பதிவு செய்து கொண்ட காரண காரியங்களே நம்பிக்கைகள் ஆகும். இந்நம்பிக்கைகள் மனித மனத்தின் வெளிப்பாடுகளாகும். குறிப்பாக மனிதனின் அச்ச உணர்வே இந்நம்பிக்கைகள் தோற்றத்திற்குக் காரணம் எனலாம். மனித வாழ்வில் நம்பிக்கைகள் என்று தோன்றின என்று திட்ட வட்டமாகக் கூற இயலாது. என்றாலும் மனித வாழ்வில் தொடர்ந்து இருந்து வருவனவாகும். தெய்வங்கள், தெய்வங்களின் தோற்றம், அருள், சக்தி வழிபாடு, சடங்குகள், சாத்திரங்கள் இவை எல்லாமே நம்பிக்கைகளின் விளைவில் தோன்றியவையே. இந்நம்பிக்கைகளை நம்பிக்கை, திட நம்பிக்கை, மூட நம்பிக்கை என மூன்றாகப் பகுக்கப்படுகிறது.

காரண காரியத் தொடர்புகளுக்கு உட்பட்டுச் சான்றுகளின் வாயிலாக நிறுவ முடிவதை நம்பிக்கை என்றும், நிச்சயம் பலன் உண்டு என்ற உறுதியான நம்பகத் தன்மையைக் கொடுப்பதைத் திட நம்பிக்கை என்றும், காரணம் காரியம் அறியப்படாத நிலையில் உள்ளதை மூட நம்பிக்கை என்றும் குறிப்பிடுவதுண்டு. சிந்தனைத் திறன் மிக்க சமூகத்தில் மூடநம்பிக்கைகள் குறைவாகவும், சிந்தனைத்திறன் குறைந்த சமூகத்தில் மூடநம்பிக்கைகள் மிகுதியாகவும் இருக்கும்.

**நாட்டுப்புற நம்பிக்கைகளின் தன்மைகள்**

பய உணர்வின் அடிப்படையில் எழுந்தமை. வாழ்வின் நன்மையே விளைய வேண்டும் என்கிற எண்ணத்தின் அடிப்படையில் வந்தவை. படிப்பறிவில்லாத பாமர மக்களின் கருத்துருவமாக விளங்குபவை. பக்கவழக்கங்கள், சடங்குகள், விழாக்கள் இவைகளோடு நம்பிக்கைப் பின்னிப்பிணைந்தவை. பிறப்பு முதல் இறப்பு வரை எல்லா நிலைகளிலும் உடன் வருபவை. மரபாக தொன்று தொட்டு வருபவை. கருத்து உருவாக நாட்டுப்புற மக்களிடையே காரண காரிய அப்படையில் வளர்ந்தவை முதலியவை நாட்டுப்புற நம்பிக்கைகளின் தன்மைகளாகும்.

**நம்பிக்கையின் வகைகள்**

நாட்டுப்புற மரபில் நம்பிக்கை முடிச்சுகள் ஏராளம். நம்பிக்கைகளைத் தொகுத்தால் ஏடு கொள்ளாது என்னும் அளவிற்கு அவை நிறைந்து காணப்படுகின்றன. அவ்வாறான நம்பிக்கைகளை

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

நாள் பற்றிய நம்பிக்கை, சகுணம் பற்றிய நம்பிக்கை, கண்ணேறு பற்றிய நம்பிக்கை என்று வகைப்படுத்தப்படுகிறது. இவற்றை பொதுவாக திட நம்பிக்கை, மூடநம்பிக்கை என்று வகைப்படுத்தப்படுகிறது.

**திட நம்பிக்கை**

நம்பகத்தன்மை கொடுப்பதை திட நம்பிக்கை என்று குறிப்பிடப்படுகிறது.

குழந்தைப் பிறப்புப் பற்றிய நம்பிக்கை

குழந்தைப் பிறப்பதும் இறப்பதும் இயல்பான செயல்பாடாக மண்ணில் இருந்து வந்தாலும், அவற்றின் சில செயல்களுக்கு இவை தாம் காரணமென்று மக்கள் நம்பி வருகின்றனர். குழந்தை பிறக்கும்போது கழுத்தில் குடல் சுற்றி இருந்தால் மாலை போட்டு பிறந்ததாக நினைத்து தாய்மாமனுக்கு ஆகாது என்றனர்.

**திருமணம் தொடர்பான நம்பிக்கை**

'முளைப்பாரி' என்ற வழக்கம் எல்லாச் சமூகத்தினரிடையே செய்யப்படும் ஒரு வழக்கமாகும். நவதானியங்களை ஊர வைத்து ஏழாவது நாள் நீரில் விட்டு வந்தால் அவர்களின் வாழ்வு வளமாக அமையும் என்று நம்பினர்.

**நாள் பற்றிய நம்பிக்கை**

'நாளும்கோளும் நலிந்தோர்க்கில்லை' என்பது பழமொழி, என்றாலும் நாட்டுப்புற மக்கள் எந்தத் தொழிலைத் தொடங்கினாலும் நல்ல நேரம், நல்ல நாள், சூலம் (திசைப் பார்த்தல்) பார்த்துத் தொடங்குவதில் பெருநம்பிக்கை கொண்டிருப்பர். விதைப்பு, நடவு, அறுவடை, சடங்குகள், வழிபாடு, பயணம், இறப்பு என்று எல்லாவற்றிலும் நாள், நேரம், சரியில்லை என்றால் அச்செயலைச் செய்யாமலிருக்கத் தயங்கவதும் இல்லை.

புதன், வியாழன்,வெள்ளி, ஞாயிறு ஆகிய கிழமைகளில் திருமண நாள் குறிப்பது நல்லது. திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் திருமணம் நடந்தால் துன்பம் நேரும், பிறந்த நாள் மற்றும் பிறந்த கிழமைகளில் திருமணம் நடந்தால் துன்பம் நேரும். எந்த நல்ல காரியத்தையும் மாலை நேரத்தில் தொடங்கக் கூடாது முதலிய நம்பிக்கைகளை மக்கள் பின்பற்றி வந்தனர்.

**சகுணம் பற்றிய நம்பிக்கை**

சகுணம் என்பது வாழ்வில் நிகழவிருக்கும் நன்மை தீமைகளைச் சில நிகழ்வுகளின் வாயிலாக உணர்த்துவது ஆகும். நற்செயலையும், நற்பயனையும் தெரிவிக்கும் நிகழ்வினை(குறியினை) நன்நிமித்தம் என்றும், தீய செயல்களைத் தெரிவிக்கும் நிகழ்வினைத்(குறியினை) தீநிமித்தம் என்றும் வகைப்படுத்துவர். இதனையே நாட்டுப்புற மக்கள் கெட்ட சகுணம் என்று குறிப்பிடுகின்றனர். சகுணம் என்ற சொல் சயனம், சவனம், என்று பேச்சு வழக்கில் இடம்பெறுவதுண்டு. புதிதாக ஒரு செயலைப் பலரும், சேர்ந்து மேற்கொள்ளும் நிலையிலும் தனிப்பட்ட நிலையிலும் சகுணம் பார்க்கும் வழக்கம் உள்ளது.

காலையில் சுமங்கலிப் பெண்கள் முகத்தில் விழிப்பது நல்லது. பயணம் போகும்போது அழுக்குத் துணியோடு வரும் வண்ணாரைக் காண்பது நல்லது. காகம் இடப்பக்கமிருந்து வலப்பக்கம் பறந்து செல்வதைப் பார்த்தால் நல்லது. வௌவால் வீட்டில் பறந்தால் தீமை வரும். காகம் கரைந்தால் விருந்தினர் வருவர் என்று சகுணம் பற்றிய நம்பிக்கைகளை நாட்டுப்புறங்களில் காணலாம்.

**கண்ணேறு பற்றிய நம்பிக்கைகள்**

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

சிலரது பார்வை தீங்கை விளைவிக்கக் கூடியது என்றும் அதனால் ஏற்படும் பாதிப்பே கண்ணேறு என்றும் கூறப்படுகிறது. இதனை கண் திருசுடி, கந்தட்டி, திட்டி, கண்ணடி என்று நாட்டுப்புற மக்களால் வழங்கப்படுகிறது. கதிர் நன்றாக விளைந்திருக்கும் வயலில் கண்ணேறுபடாமல் இருக்க உயரமான திருசுடிப் பொம்மை வைத்திருப்பது. புதிதாகக் கட்டிய வீட்டின் முன்பு திருசுடிப் பூசணிக்காய் பெரிய பூசணிக்காயில் கோரமான உருவத்தை வரைந்து கட்டித்தொங்க விடுவது. குழந்தைகளுக்குக் கண்ணேறு படாமல் இருக்கக் கன்னத்தில் பெரிய கறுப்புப் பொட்டு வைப்பது போன்றவை கண்ணேறு பற்றிய நம்பிக்கைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுபவை ஆகும்.

**முடிவுரை**

சடங்குகள் கூட்டாக நிகழ்த்தப்படும் தன்மையைப் பெற்றிருப்பதால் சமூக வாழ்வில் ஒற்றுமையை ஏற்படுகிறது. மக்களை ஒன்றிணைக்கிறது. நாட்டுப்புற மக்களின் வாழ்வோடு ஊறிப்போய் உள்ள நம்பிக்கைகள் அவர்களைப் பாதுகாக்கின்றன. மன உளைச்சல் ஏற்படும்போதெல்லாம் தக்க மருந்தாய்ச் செயல்படுகின்றன. புதிய நாகரிகம் நாட்டுப்புற மக்களின் வாழ்க்கை முறையை மாற்றியமைத்து வந்தாலும் மரபு ரீதியான சடங்கு முறைகளையும் நம்பிக்கைகளையும் மக்கள் மாறாமல் பின்பற்றி வருகின்றனர். இது மக்கள் சடங்கு மற்றும் நம்பிக்கைகளின்மேல் கொண்டுள்ள நம்பகத்தனமையை உறுதிப்படுத்துவதாக உள்ளது. சடங்கு நிகழ்வுகளையும் நம்பிக்கைகளையும் பண்பாட்டுப் பின்புலத்தில் ஆழ்ந்து நுணுகிப் பார்ப்பது புதிய தேடலுக்கும் வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

**பார்வை நூல்கள்**

[1.] ஓ.முத்தையா, **பண்பாட்டு பதிப்புகள்**, குறிஞ்சிப் பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை. 2005.

[2.] முனைவர்.அ.தட்சிணாமூர்த்தி, **தமிழர் நாகரிகமும் பண்பாடும்,** யாழ் வெளியீடு, சென்னை-62. 2000.

[3.] அரங்க. இராமலிங்கம், **திருக்குறள்(உரை விளக்கம்),** வர்த்தமானன் பதிப்பகம், சென்னை. 2015

[4.] புலியூர் கேசிகன்**, சிலப்பதிகாரம் (**உரை). பாரி நிலையம், சென்னை. 2003.

[5.] ச.வே.சுப்பிரமணியம், **தொல்காப்பியம்(உரைவிளக்கம்),** மணிவாசகர் பதிப்பகம், சென்னை. 2009.

[6.] ச.வே. சுப்பிரமணியம், **சங்க இலக்கியம் (உரை),** மணிவாசகர் பதிப்பகம், சென்னை. 1999.